மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 15 திங்கட்கிழமை (29.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 215

# வவுனியா அகதிகளைப் பராமரிக்க போதியளவு நிதி வசதி இல்லை!

## அடுத்த மாதத்தில் உணவு வழங்குவதே கஷ்டமாம்

கொழும்பு, ஜூன் 29

**வவுனியாவில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளைத் தொடர்ந்து பராமரிப்பதற்குத் தம்மிடம் போதியளவு நிதி ஒதுக்கீடு இல்லை எனத் தொண்டு அமைப்புகள் தெரிவித்துவிட்டன என்றும் இதனால், அடுத்தமாதத்தில் அகதிகளுக்கு உணவு வழங்குவது கூட பெரும் சிக்கலாக இருக்கப்போகின்றது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான அமைப்புகள் எச்சரித்திருக்கின்றன.**

**இடம்பெயர்ந்தவர்களுக்கான நீண்டகாலத்திட்டம் இலங்கை அரசினால் முன்வைக்கப்படும் வரை நிதி உதவிகளைத் தொடர்ச்சியாக வழங்க உதவி நிறுவனங்கள் மறுத்துவிட்டன என்றும் ஐ.நா. அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.**

வவுனியாவில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல மனிதாபிமான அமைப்புகள் தாங்கள் அமைத்த கூடாரங்களை ஆரம்பத்தில் மூன்று மாதத்துக்கே பராமரிப்பதற்கு இணங்கின. அந்தக் காலப்பகுதி தற்போது முடிவடைகின்றது. தொடர்ந்தும் அகதிகளைப் பராமரிப்பதற்கு அந்த அமைப்புகளிடம் நிதிவசதியில்லை என ஐ.நா.வின் மனிதாபிமான அலுவலகம் தெரிவித்துள்ளது.

**நீண்டகாலத்திட்டம் முன்வைக்கப்படவில்லை**

இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக நீண்டகாலத் திட்டமொன்று முன்வைக்கப்படும் வரை மூன்று மாதங்களுக்கு மேல் நிதியுதவி வழங்குவது குறித்து உறுதிமொழிகளை அளிக்க இந்த அமைப்புகள் தயங்குகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பாக ஐ.நா. அமைப்புகள் மேலும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிக்குளத்தில் புலிகள் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 29

வவுனியா, செட்டிகுளம் முகாமில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் (08 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் தடம் புரண்டது முன்பள்ளி மாணவர்கள் 26 பேர் காயம்

கொழும்பு, ஜூன் 29

மஹியங்கனையிலிருந்து தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் ஒன்று தடம் புரண்டதில் அதில் பயணஞ் செய்த 26 முன்பள்ளி மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்கப் பிரஜைகளுக்கு அறிவுறுத்து

வாஷிங்ரன், ஜூன் 29

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று அமெரிக்கா தனது பிரஜைகளை எச்சரித்திருக்கிறது.

இது சம்பந்தமாக இராஜாங்கத் திணைக்களம் அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளது.

இலங்கையில் பாதுகாப்புச் சிக்கல்கள் இருப்பதால் தனது நாட்டுப் பிரஜைகள் இங்கு அவதானமாக இருக்கவேண்டும் என்று அந்தத் திணைக்களம் எச்சரித்திருக்கிறது.

''அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு வெற்றிபெற்றதாக அறிவித்தது. எனினும், இலங்கைக்குச் செல்வோர் தமது சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பில் அரசின் ஏற்பாடுகள் போதுமானவையாக அமையவில்லை'' என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்குப் பயணம் செய்யும் அமெரிக்கப் பிரஜைகளை அவதானத்துடன் இருக்கும் படியும், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங் (08 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக அணிதிரள வாய்ப்பே இல்லை என்கிறார் இராணுவ அதிகாரி

கொழும்பு, ஜூன் 29

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் இராணுவ ரீதியாக அணி திரள்வதற்காக வாய்ப்பு இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தனிநாட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து மீண்டும் இலங்கையில் ஆயுதப் போராட்டமொன்றை நடத்த புலிகள் அமைப்புக்கு எந்தவிதமான சந்தர்ப்பமும் அளிக்கப்பட மாட்டாது எனவும் அவர் கூறியுள்ளார்.

தனியார் சிங்கள வானொலிச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என்று இணையத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர் மேலும் கூறியதாவது:-

குமரன் பத்மநாதன் போன்றோர் வெளிநாடுகளிலிருந்து விடுத்துவரும் அறிக்கைகள் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாதென அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் வழங்கிய பெருந்தொகைப் (08 ஆம் பக்கம் பார்க்க)

## 'சிரச'வின் ஒலிவாங்கியை நேற்று பிடுங்கி எறிந்தாராம் மேர்வின்!

### ஊடகவியலாளரைக் கௌரவிக்கும் நிகழ்வில்

கொழும்பு, ஜூன் 29

போர்க்களத்தில் நின்று செய்திகளை சேகரித்து வெளியிட்ட ஊடகவியலாளர்களைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மேர்வின் சில்வா, 'சிரச' தொலைக்காட்சி ஊடகத்தின் ஒலி வாங்கியை வீசி எறிந்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மற்றும் பல அமைச்சர்கள் முப்படைகளின் பேச்சாளர்கள் கலந்து கொண்ட (08 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டக்கல்விக்கு வயதெல்லை முப்பது; அரசின் முடிவுக்கு ஐ.தே.க. கண்டனம்

கொழும்பு, ஜூன் 29

சட்டக்கல்வியை பயிலும் மாணவருக்கான வயதெல்லையை 30 ஆக நிர்ணயிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பியான லக்ஷ்மன் கிரியெல்லவே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கல்வியைச் சிறிது சிறிதாக சீரழித்துக்கொண்டுவரும் இந்த அரசு, தற்போது (08 ஆம் பக்கம் பார்க்க)

## உதயனுக்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகையை இயங்க அனுமதிப்பதில்லை என தெரிவித்து, 'உதயன்' பணியாளர்களை அச்சுறுத்தும் துண்டுப்பிரசுரம் ஒன்று 'நாட்டைக்காக்கும் தமிழ்க் கூட்டமைப்பு' என்ற அமைப்பின் பெயரினால் யாழ் நகரில் உள்ள சில பத்திரிகை முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

24 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் நாளேடு ஒன்றுக்கு, யாழ்ப்பாணத்தில் மிக முக்கிய தேர்தல் ஒன்று நடைபெறவிருக்கையில், இப்படி அச்சுறுத்தல் விடுக்கப்படுவது தேர்தல் சட்டமீறல் நடவடிக்கை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பயங்கரவாதத்தை ஒழித்து, ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுத்திருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள சூழலில்-

நீண்டகாலம் இயங்கும் ஒரு பத்திரிகையை அச்சுறுத்தி- சட்டவிரோத நடவடிக்கை மூலம்- செயலிழக்கச் செய்யும் எத்தனத்தில் ஈடுபடத்தக்க அளவுக்கு ஒரு கட்டமைப்பு குடாநாட்டில் செயற்படுகின்றதா என்பது குறித்து அரசியல் கட்சிகள் பலவும் அதிருப்தியும், விசனமும் தெரிவித்திருக்கின்றன.

இந்த விடயம் குறித்து அரசின் உயர் மட்டத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பல சர்வதேச நாடுகளின் தூதரகங்களும் இராஜதந்திர மட்டத்தில் இவ்விடயம் குறித்து (08 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் தமிழ்ப்படைப் பிரிவு தளபதி பொன்சேகாவிடம் திட்டம் உண்டு

### அமைச்சர் முரளிதரன் தகவல்

கொழும்பு, ஜூன் 29

இராணுவத்தில் தமிழ்ப்படைப்பிரிவு ஒன்றை உருவாக்கும் நோக்கம் இராணுவத்தளபதிக்கு உண்டு.

இதனைத் தெரிவித்திருக்கிறார் தேசிய நல்லிணக்க அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா).

பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் சொன்னதாவது:-

கிழக்கில் சில வருடங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து என்னுடன் வந்தவர்களில் சுமார் 900 பேர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையில் 600 பேர் இராணுவத்தில் ஏற்கனவே சேர்ந்துள்ளனர். 300 பேர் இராணுவத்துடன் தற்போது உள்ள போதிலும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முழுமையாக உள்வாங்கப்பட்டு விடுவார்கள்.

சாதாரண சிப்பாய் தரத்திலேயே இவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். சிலர் அதிகாரிகளாக நியமனம் பெறும் வாய்ப்புகள் (08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்கள் சிந்தும் துளிகள்



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவி செல்வி.தாரகாவின் அன்பு அம்மம்மா

### கதிர்காமு இலட்சுமி

நீண்ட துயரங்கள் வ்ரிகளில் அடங்கவில்லை
வடியும் கண்ணீரை நிறுத்த முடியவில்லை
மரண வலையில் நாம் விழுவது நியதியானது
கண்ணெதிரே உடல் தீயினில் சாம்பலாகிறது உம் உறவுகள் சிந்தும் கண்ணீரோடு எம் கண்ணீரையும் காணிக்கையாக்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கம்பன் படிப்பகம்.
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

சக மாணவர்கள்.

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்வியகத்தின் உயர்தர வணிகக் கல்வி ஆசிரியர் திரு.S.K.சோதிலிங்கம் அவர்களின் தாயார்

### திருமதி கதிர்காமு இலட்சுமி

27.06.2009 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருடன் துயர் பகிர்கின்றோம்.

மாணவர்கள், ஆசிரியதோழர்கள், நிர்வாகத்தினர்.

A.C.A. 55, St.Lucia's Street, Kotahena, Colombo-13. 2335287

A.C.A. 59, Green Road, Trincomalee. 026 222 7173

## கண்ணீர் அஞ்சலி



எமது வணிகக் கல்வி ஆசிரியர் திரு.S.K.சோதிலிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி கதிர்காமு இலட்சுமி

27.06.2009 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் இறைவனிடம் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருடன் துயர் பகிர்கின்றோம்.

2009 A/L வர்த்தகப் பிரிவு மாணவர்கள்,
A.C.A. கல்வியகம் இல.55, புனித லூசியாஸ் வீதி, கொழும்பு-13.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 |  | 30 |
| * | | * |
| 06 | | 05 |
| * | | * |
| 1933 | | 2009 |

### அமரர் தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை

கரம்பொன் செபஸ்தியார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 32/18, அச்சக வீதியை வதிவிடமாகவும் கொண்ட தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை 30.05.2009 அன்று இந்தியாவில் (மணிப்பாக்கம்) காலமானார். அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (29.06.2009) காலை யாழ்.மரியன்னை பேராலயத்திலும் இந்தியா புனித லூர்து அன்னை ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

என்றும் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
ரி.ஜெயராணி குடும்பத்தினர்
கரவெட்டி.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கமுத்து சின்னத்துரை



பாலாவி தெற்கு, கொடிகாமத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் பெரியமாவடி, சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து சின்னத்துரை நேற்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா சின்னத்துரையின் அன்பு மனைவியும் துரைசிங்கம்(லண்டன்), தனபாலசிங்கம் (சின்னண்ணா), இரத்தின சிங்கம்(லண்டன்), சுசீலாதேவி(ஆசிரியை, யா/கச்சாய் அ.த.க பாடசாலை), செந்தி(சுவிஸ்), குணம்(சுவிஸ்), வசந்தன்(சுவிஸ்), ரகு (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தலீலா (லண்டன்), புவி, மலர்(லண்டன்), நாதன், சாந்தி (சுவிஸ்), பாமா (சுவிஸ்), ரஜி,பிரதீபா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

பெரியமாவடி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## விமல் வீரவன்ஸ கட்சிக்கு இரு அமைச்சுப் பதவிகள்

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நந்தன குணதிலக, பியசிறி விஜயநாயக்க ஆகிய இருவரும் இவ்வாரம் அமைச்சர்களாகப் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

எனினும் தங்களது கட்சித் தலைவர் விமல் வீரவன்ஸ எவ்வித அமைச்சரவைப் பதவிகளையும் ஏற்கப் போவதில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

''எமது கட்சிக்கு இரு அமைச்சரவைப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதிலொன்று அமைச்சரவை அந்தஸ்து அற்றது. அமைச்சர்களாக நந்தன குணதிலகவையும் பியசிறி விஜய நாயக்கவையும் கட்சி நியமித்துள்ளது'' என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நந்தன குணதிலகவிற்குப் பெருந்தெருக்கள் அல்லது உல்லாசப் பயணத்துறை அமைச்சு வழங்கப்படலாம் என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

கட்சியின் தலைவர் விமல் வீரவன்ஸவுக்கு அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு அரசு முன்வந்தபோதிலும் அவர் அதனை ஏற்க விரும்பவில்லை என்று, தெரிவித்துள்ள கட்சி வட்டாரங்கள் பியசிறி விஜய்நாயக்க தேச நிர்மாணத்துறை அமைச்சராகப் பதவியேற்பார் என்றும் குறிப்பிட்டன.

## தவறிவிட்டது

கோணாமலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவில்என்னும் முகவரியுடைய பொன்னுத்துரை சண்முகலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை(472781928V) கொக்குவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தயவு செய்து கொக்குவில் சண்முகம் சைக்கில் கடையில் ஒப்படைக் கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தேவை

கணனியில் தமிழ்,ஆங்கிலம் ரைப் பிங் தெரிந்த மற்றும் போட்டோக் கொப்பி, மல்ரி சென்ரர் அனுபவமுடைய பெண் பணியாளர்கள் தேவை.

S.T.R. மல்ரி சென்ரர்,
45A, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. தொ.பே.0779257488
(யாழ்.மாநகரசபை எல்லைக் குட்பட்டதாக இருத்தல் விரும்பத்தக்கது.)

## நன்றி நவிலல்



### அமரர் மகேந்திரன் சசீந்திரன்

22.06.2009 அன்பு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு மகனின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கா.மகேந்திரன்
51,K.K.S வீதி, கொக்குவில். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கனகசிங்கம் சிவபாலசுந்தரம்

சாவகச்சேரி, கற்குழியைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் சந்தியைநிரந்தர வதிவிடமாகவும் வவுனியா, தோணிக்கல்லை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கனகசிங்கம் சிவபாலசுந்தரம் நேற்று முன்தினம் (27.06.2009) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் சுகந்தினியின் அன்புத்தந்தையும் சுரேஸின் (உரிமையாளர்,றோயல் பேக்கரி) அன்பு மாமனாரும் கம்சா,அமரர் சுவைந்தன், யனிதன், கஜந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2009)திங்கட்கிழமை வவுனியா, தோணிக்கல்லில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] றோயல் பேக்கரி,
[illegible]
சாவகச்சேரி. தொ.பே.0776146135

தகவல்: மனைவி,
மருமகன்.

## மரண அறிவித்தல்கள்

### சுகுமார் ரதிதேவி



இணுவில், காரைக்கால்-சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சுகுமார் ரதிதேவி (27.06.2009) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் அம்பலவாணர்- சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சுகுமாரின் அன்பு மனைவியும் கோகிலன், ஜனனி ஆகியோரின் அன்புத் தாயாரும் கௌரிமனோகரி(சுவிஸ்), கிருஷ்ணா(சுவிஸ்), திருமால்(சுவிஸ்), பரமதாஸன் (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாஸ்கரன் (சுவிஸ்), சித்தீஸ்வரி(சுவிஸ்), உமாதாரணி (சுவிஸ்), உதயராணி (இணுவில்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

காரைக்கால் சிவன் கோயிலடி.
இணுவில் கிழக்கு. இணுவில்.

தகவல்: அம்பலவாணர்
சின்னம்மா(பெற்றோர்)
பரமதாஸன்- சகோதரன்

### திருமதி மகாதேவா தனபூபதி



ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கலைவாணி வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா தனபூபதி நேற்று(28.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகாதேவாவின் (இளைப்பாறிய பொறியியலாளர், இ.போ.சபை,கோண்டாவில்) அன்பு மனைவியும் தனராஜ் (பொறியியலாளர், இ.போ.சபை, காரைநகர்), தயாளினி, காலஞ்சென்ற தனரூபன் மற்றும் தர்மினி ஆகியோரின் தாயுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உறறார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்:
தனராஜ்(மகன்)
(இ.போ.சபை, காரைநகர்)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கணேசலிங்கம்



யாழ்ப்பாணம், நீராவியடி பிறவுண் றோட்டைப் பிறப்பிடமாவும் வெள்ளவத்தை, பெரேராலேனை வதிவிடமாகவும் கொண்டிருந்த வைத்திலிங்கம் கணேசலிங்கம் 26.06.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - தையல்நாயகி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற வன்னியசிங்கம் - சிவநாயகம்(பேபி) தம்பதிகளின் மருமகனும் செல்வநாயகியின்(பபா) அன்புக் கணவரும், சுதர்சன், வசந்தன், சுமங்கலா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரேணுகா, சக்திகுமரன் ஆகியோரின் மாமனாரும், சஷினி, துஷானி, கீர்த்தனா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லப்பா தம்பதிகள், காலஞ்சென்ற திரு.திருமதி சண்முகநாதன் தம்பதிகள் ஆகியோரின் பெறாமகனும் பொன்னுத்துரை - அமரர் கிருஷ்ணலீலா தம்பதிகளின் மருமகனும் பாலகௌரி, ஜெகௌரி, தயாகௌரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், குமுதினி, நளாயினி ஆகியோரின் அத்தானும், அற்புதநாயகி, தாமோதரன், லோகநாயகி, தியாகராஜா, செல்லையா, வெற்றிவேலு, பாக்கியநாயகி, ஸ்ரீபிரகாசன், நாகேஷ்வரநாயகி ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.06.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியிலிருந்து கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்ச லிக்காக வைக்கப்பட்டு 30.06.2009 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஈமைக்கிரியைகளைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு கல்கிசைபொது மயானத்தில் தனகஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8B 1/1,பெரேரா லேன்,
வெள்ளவத்தை.
தொ.பே: 0112361557


தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்வு 29.07.1939

உதிர்வு 14.07.2005

# நெஞ்சை விட்டகலாத நான்காம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி இராசேந்திரம் பாக்கியம்

அன்புள்ள அம்மா!
பாசத்தின் ஊற்றே - எம்
இதயத்தின் தாரகையே!!
அமுதுடன் நீங்கள்
ஊட்டிய அன்பும்
பாசத்துடன் எம்மைத்
தாங்கிய பக்குவமும்
பாரினில் எங்கும்
காணமுடியவில்லையே!!!
ஆண்டுகள் நான்கு
ஓடி மறைந்திடினும்
உங்கள் நினைவுகள்
என்றும் மறைந்திடுமோ?
பரமனின் காலடியில்
உங்களுடன் கலக்கும்வரை
நினைவு கூர்ந்து
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

830, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1099 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

02 25 37 53

மிதுனம்

26-06-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 3,776,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 198,798 | 20/- | 3,975,960/- |
| 2 இலக்கங்கள் | 18,264 | 40/- | 730,560/- |
| 1 இல. + லக்கினம் | 18,034 | 60/- | 1,082,040/- |
| 2 இல. + லக்கினம் | 1,679 | 200/- | 335,800/- |
| 3 இலக்கங்கள் | 494 | 1000/- | 494,000/- |
| 3 இல. + லக்கினம் | 42 | 10,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,776,300/- | - |
| மொத்தம் | | | 7,438,360/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 237,318 | | 7,938,360/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,664,500/-

2009 ஜூன் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| நுவரெலியா | 500276911-1-28 |
| கண்டி | 500283013-8-33 |
| கொழும்பு | 500273334-5-17 |
| கேகாலை | 500283834-2-09 |
| மாத்தறை | 500276213-0-40 |

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 16 ★ 02 ★ 1923



ஆண்டவன் அடியில் 30 ★ 05 ★ 2009

## திருமதி றோசன்னா பொன்னையா

அம்மா எங்களுக்கு அனைத்தும்
நீயாய் இருந்தாய்
இவ்வுலகில் உன் உருவே
எங்கும் எதிலும் தெரியுதம்மா
எங்கள் இதய துடிப்பாகி

எல்லா நினைவும் நீயாகி
உன் உயிர் உள்ளவரை
எமக்காய் வாழ்ந்தாய்
எம்முயிர் உள்ளவரை அம்மா
நாம் உன்னை மறவோம்

41, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். (சி/559243) குடும்பத்தினர்.

# S.T.JOHN'S COLLEGE JAFFNA OLD BOYS' ASSOCIATION ANNUAL GENERAL MEETING

The 93rd Annual General Meeting of the Old Boys' Association would be held on Saturday the 04th of July 2009 at 9.00 a.m. in the College Auditorium.

**PROGRAMME FOR THE DAY**

07.00 a.m. - Holy Communion Service
08.00 a.m. - Fellowship Breakfast
09.00 a.m. - Annual General Meetion

**AGENDA**

1.Prayer
2.Vote of condolence
3.Minutes of the last AGM
4.Principals review
5.Annual report
6.Statement of accounts
7.Election of of office bearers
8.College song

Old boys who wish to join in the Breakfast are requested to obtain your tickets (Rs.100/-) from the treasurer Mr.T.Nanthakumaran at the college till 3rd of July 2009

Please note that the proceedings of the day are curtailed and we expect our members to contribute towards helping our brothers and siters in need in the welfare camps.

Kindly treat this notification as the invitation to the A.G.M in case you fail to receive our intimation by post.

V.Sanjeev
Secretary

"Light Shineth in Darkness" (சி/559259)

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

## பதவி வெற்றிடம்

**1.காசாளர்** (Cashier)
18 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**2.வரவேற்பாளர்** (Receptionist)
18 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ,த. சாதாரணதரத்தில் சித்தியடைந்தவராகவும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக தொடர்பாடல் செய்யக் கூடியவராகவும் உள்ள பெண்பாலார் விரும்பத்தக்கது.

**3.வாகன ஓட்டுனர்** (Driver)
க.பொ.த.சாதாரணம் கற்றவராகவும் A Class வாகன அனுமதிப்பத்திரம் உடையவராகவும் 8 வருடத்திற்கு குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10.07.2009

விண்ணப்பத்துடன் தங்களின் தகைமைகளிற்கான நிழற்பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

தலைவர்.
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை,
சுழிபுரம்.

## மங்கள சேவை

திருமணத் தரகர், பதிவு இல. TN/PS/0009

எம்மிடம் தங்கள் மணமகன், மணமகளுக்கு உள்நாடு, வெளிநாடு சாதி, சமய வேறுபாடின்றி தங்கள் தகுதிக்கேற்ப மணமக்கள் தேடித் தரப்படும். நேரில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகள் யாவும் இலவசம்.

தொடர்புகளுக்கு: த.மு.: இ.தேய்வேந்திரம்பிள்ளை (J.P.), 42, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தொ.பே.இல.: 0771340071.

## பாரவூர்தி விற்பனைக்கு

41XXXX இலக்கம் கொண்ட பாரவூர்தி விற்பனைக்குண்டு.
தொடர்பு: கே.ஜெயா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. தொ.பே.இல.: 0776702432.

## காணி விற்பனைக்குண்டு

சண்டிலிப்பாய் கிழக்கு இராஜ இராஜேஸ்வரி அம்பாள் (பேச்சி அம்மன்) ஆலயத்திற்கு வடமேற்கில் உள்ள பழைய கிணற்றடிக்கு அருகில் உள்ள 03 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: திரு.V.S.இராசதுரை
உடுவில் தெற்கு, சுன்னாகம்
அல்லது
திரு.அ.அருள்ராசா (அப்பன்),
இராஜ இராஜேஸ்வரி அம்பாள் வீதி, சண்டிலிப்பாய் கிழக்கு.
(85957)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சிவநேசன்



கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் அச்செழுவை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சிவநேசன் (25.06.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக்கணவரும் பிரதீபன், பிரதீபா (சுவிஸ்), பிரதாபன், பிறின்சி ஆகியோரின் அன்புத் தந்தையும் சயந்தினி, தபேந்திரன் (சுவிஸ்), ஸ்ரீராகவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சஞ்சிகா, ஸாருஜன், ஹரிசனா, நிவேதா, ஜதுர்ஸன் ஆகியோரின் அன்புப் பேரனும் திருச்செல்வராசா, கமலநாதசத்தியேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திலகவதி, சௌந்தரவல்லி (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.06.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு வீரபத்திரகோயிலடி,
அச்செழு.

தகவல்:
திருமதி சி.சந்திராதேவி (மனைவி),
சி.பிரதீபன் (மகன்).
(85959)

## செல்லையா ஜயந்தன் (ஆசிரியர்)

(பளை றோ.க.த.க.பாடசாலை)



வரணி, இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லையா ஜயந்தன் (25.06.2009) வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.06.2009) திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வா.ஆனந்தராசா,
இடைக்குறிச்சி,
வரணி.

தகவல்:
அம்மா, மாமி, தம்பி,
மச்சான்மார், மச்சாள்மார்.

# பேக்கரி மற்றும் ஹோட்டலுக்குத் தேவையான இயந்திரங்கள்

சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கும் உங்களுக்கு ....

பிற இடத்தில் இருந்து பேக்கரி உண்டிகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் உங்களுக்கு ...

30 வினாடிகளில் உற்பத்தி செயற்பாட்டை ஆரம்பிக்கக் கூடிய பூரணமான ஷெரி பேக்கரி தொகுதியொன்று



- பேக்கரி மற்றும் ஹோட்டல் கைத்தொழிலுக்குத் தேவையான அனைத்து இயந்திரங்களும் ஒரே கூரையின் கீழ்
- ஓர் ஆண்டிற்கான பூரண உத்தரவாதம்
- 24 மணி நேரமும் செயற்படும் விற்பனைக்குப் பின்னரான தரமான சேவை (தேவையான அளவு உதிரிப்பாகங்கள்)
- மாதம் முழுவதும் திறந்திருக்கும் மாலம்பே, குருணாகல், காலி காட்சியறைகள் (போயா தினங்கள் தவிர்ந்த)
- கட்டணம் செலுத்தப்பட்டதும் நாடு முழுவதற்கும் போக்கு வரத்து வசதி இலவசம்
- உண்டிகளைத் தயாரித்தல் தொடர்பாக அனுபவம் பெற்ற பேக்கரியாளர்களினால் பயிற்சி இலவசம்
- தேவையான அளவு கையிருப்புக்கள்
- நிதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

077 4140138
077 7427777
021 7900022

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

நூபதி பாண்

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கசிப்பு வைத்திருந்த மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூன்29

கசிப்பு வைத்திருந்த மூவர் சாவகச்சேரி நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப் பட்டனர்.

பருத்தித்துறை மதுவரித் திணைக் களத்தினர் வரணி குடமியன், கெருடா வில் கொட்டம்பிட்டி, நாவற்குழி ஆகிய இடங்களில் நடத்திய திடீர்ப் பரிசோதனை யின்போது அகப்பட்ட மூவருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகள் கடந்த வெள்ளிக் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இவர்களை ஜூலை 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத் தரவிட்டார்.

இதேவேளை கைதடி மத்தி, மட்டுவில் தெற்கு ஆகிய இடங்களில் அனுமதிப் பத் திரமின்றி சாராயம் மற்றும் கள் வைத்தி ருந்த மூவருக்கு 11ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (203-207)

## சேதனப்பசளையை ஊக்குவிக்கத் திட்டம்

கோப்பாய்,ஜூன்29

புத்தூர் கமநலசேவை பெரும்பாகப் பிரிவில் சேதனப்பசளையை விவசாய செயற்பாட்டில் ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் சேதனப் பசளைப் பிரயோகத்தின் அனுகூலங்கள் பற்றிய கருத்துரைகள், பயன்படுத்தும் முறைகள், சேதனப் பசளை தயாரிப்பு ஆகியவை பற்றி விவசாயப் போதனாசிரியரால் விளக்க உரை கள் வழங்கப்பட்டு வருகின்றன. (203-72)

## விசேட வழிபாடுகள்

வடமராட்சி,ஜூன்29

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 195ஆவது ஆண்டை முன்னிட்டு பருத் தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் இன்று திங்கட்கிழமை விசேட வழிபாடு கள் இடம்பெறவுள்ளன.

பருத்தித்துறை, கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு என்.அருள்நாதன் தலைமையில் வழிபாடு இடம்பெறும். (203-236)

## அம்பன் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.மாவட்டச் சுகாதாரத் திணைக் களத்தின் அம்பன் பிரதேச வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இது அம்பன் வைத்தியசாலை தற்போது தற்காலிகமாக இயங்கிவரும் குடத்தனை ஆரம்பச் சுகாதார நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். இப்பிரதேச மக்கள் அவசர மருத்துவ நிலைகளின்போது இந்த அம்புலன்ஸ் வண்டியின் சேவையை நாட லாம். அவரச மருத்துவச் சிகிச்சை தேவைப் படும் நோயாளர்கள் இங்கிருந்து 24 மணி நேரமும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே இச்சேவை தேவைப்படும் இப்பிரதேச மக்கள் எமது குடத்தனை ஆரம்ப சுகாதார நிலையத்து டன் தொடர்புகொள்ளலாம் என்று யாழ்.பிராந் திய பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (1)

# தென்மராட்சியில் 28 குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

தென்மராட்சிப் பிரதேசத்தில் வசதியற்ற குடும்பங்களை மேம்படுத்துவதற்கான திட்டத்தின்கீழ் 28 குடும்பங்களுக்கு2 லட் சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள் கள் வழங்கப்படவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவில் இப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு திட்டத்துக்கும் தெரிவு செய் யப்பட்ட பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பொருள்களைக் கொண்டு செல்வதற்குரிய ஆயத்தங்களுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட் டுள்ளது.

கோழிக்குஞ்சு வளர்த்தல், வீட்டுத் தோட்டம், நீர் இறைக்கும் இயந்திரம், மூக் குக்கண்ணாடி, வாழை, தென்னை, மாங் கன்று, பழமரக்கன்றுகள், நுளம்பு வலைகள் வழங்கல் ஆகிய திட்டங்களில் பொருள் கள் விநியோகிக்கப்படவுள்ளன. (207)



இன்ரறக்ட் கழகத்தின் பதவியேற்பு நிகழ்வும் 'செய்வம்' மலர் வெளி யீட்டு விழா வும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். றோட்டேறியன் கே.பாலசுப்பிரமணியம், யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேறியன் திருமதி தர்மகுலசிங்கம், கல்லூரி அதிபர் வணபிதா ஜெறோ செல்வநாயகம் அடிகளார் ஆகியோர் விழா மேடைக்கு வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## றோயல் குழுமத்தின் விஞ்ஞானக் கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் யாழ். மாணவர்கள் முன்னிலை

யாழ்ப்பாணம்,ஜூன்29

இரசாயனவியலுக்கான றோயல் குழுமம் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாண வர்களிடையே நடத்திய விஞ்ஞானக் கட் டுரைப் போட்டியில் யாழ்.மாணவர்கள் முன் னிலை இடங்களைச் சுவீகரித்துள்ளனர்.

இந்தக் கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் வெற்றியீட்டிய யாழ். மாணவர்களின் விவரம் வருமாறு.

*முதலாமிடம்* - செ.அபர்ணா, உடுப் பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,

*இரண்டாமிடம்* - பா. நிதூஜன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

சான்றிதழும் பாராட்டும் பெறுவோர்:

ஜெ.துர்க்கா - உடுப்பிட்டி மகளிர் கல் லூரி, ம.கோபிகா - உடுப்பிட்டி அமெரிக் கன் மிஷன் கல்லூரி, இ.சங்கீர்த்தனா- வேம்படி மகளிர் கல்லூரி. (4)

# நலிவுற்றோருக்கான உணவு நிவாரணம் வேலைக்கான உணவுத் திட்டமாக மாற்றம்

வேலணை,ஜூன்29

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை காலமும் நலிவுற்ற குடும்பங்களுக்கு உணவளிக்கும் குடும்ப பங்கீட்டு அட் டைக்கு வழங்கப்பட்ட உலக உணவுத் திட்ட நிவாரணம் இம்மாதம் தொடக்கம் இலகு வேலைக்கான உணவுத் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்த வேலைத் திட் டத்தில் கீழ்வரும் நடைமுறைகள் பின் பற்றப்படவுள்ளன.

✱ பயனாளி குடும்பத்தில் ஒருவர் பங்கு பற்றவேண்டும்.

✱ பதில் எவரையும் வேலைத்திட்டத் தில் நியமித்தல் கூடாது.

✱ பயனாளி குடும்பத்தில் ஒருவர் மாதாந்தம் 11 நாள்கள் வேலை செய்ய வேண்டும்.

✱ தினவரவுக் குறிப்பேட்டில் வேலைக் குச் சமுகமளிப்பவர்களது பெயரைக் குறிப்பிட்டு வரவை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

✱ அடையாளங் காணப்பட்ட திட்டங் களைச் செயற்படுத்தல் வேண்டும்.

✱ கிராம உத்தியோகத்தரால் வழங்கப் பட்ட பயனாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப செயற்படுத்தல் வேண்டும்.

✱ பயனாளிகள் பதிவேட்டிற்கும் வேலைக்குச் சமுகமளித்தோர் பட்டியலுக் கும் உறுதிப்பாட்டைப் பேணல்.

✱ தினவரவுக் குறிப்பேடு, பிரதேச செய லகத்தால் வழங்கப்படும் ஆவணங்கள் அனைத்தையும் பூரணப்படுத்தி கிராம உத்தியோகத்தர்கள் அந்தந்த மாதங்களில் 30ஆம் திகதிக்கு முன்பு பிரதேச செயலகத் தில் சமர்ப்பித்தல் வேண்டும் போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன. (203-167)

## கந்தையா வடிவேலு ஞாபகார்த்த கட்டுரைப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,ஜூன்29

இலங்கை கலை இலக்கிய சங்கம் நாட கக் கலைஞர் கந்தையா வடிவேலு ஞாப கார்த்தமாக அகில இலங்கை ரீதியில் நடத் தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:

முதலாம் இடம் - போ.சித்திரா (சுது மலை தெற்கு), இரண்டாம் இடம் - ச.உசாந் தினி (கோப்பாய் மத்தி), மூன்றாம் இடம்- கு.சுபாசினி (கோங்கா கொடுவ, தலாத்து ஓயா, கண்டி).

முதல் மூன்று இடங்களைப் பெற்றவர் களுக்கு முறையே 5 ஆயிரம், 3 ஆயிரம், 2 ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

வெற்றியீட்டிய ஏனைய பத்துப் போட்டி யாளர்களுக்கு வெற்றிச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இவர்களுக்கான கௌரவிப்பும், பரிசில் வழங்கலும் ஓகஸ்ட் மாதம் நடைபெற வுள்ள கலை இலக்கிய விழாவில் வழங் கப்படவுள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் பொன்.சுகந்தன் அறிவித்துள்ளார். (201)

## விசேட தேவையுடையோருக்கு உதவியும் கருத்தமர்வும்

யாழ்ப்பாணம்,ஜூன்29

நவாலி ஹேமலதா செல்வராசா சிறுவர் ஞாபகார்த்த நிறுவன அனுசரணையில் மறைந்த சமுர்த்தி அலுவலர் செ.சதீஷ் ஞாபகார்த்தமாக விசேட தேவை உடைய வர்களுக்கான உதவியும், கருத்தமர்வும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நவாலி மகாவித்தியாலயத் தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டி லிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ, சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப் பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செய லர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாய கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா, நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா. வசந்த்குமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

இதில் ''இன்றைய கால கட்டத்தில் விசேட தேவை உடையவர்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்கு'' எனும் தலைப்பில் பசுமைப் புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் கருத்துரை வழங்க வுள்ளார். (9)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கட்டாக்காலி நாய்களால் வீதிகளில் தொல்லை

யாழ்ப்பாணம்,ஜூன்29

பருத்தித்துறைப் பகுதியில் கட்டாக் காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த நாய்கள் வீதிகளில் நடந்து செல் வோரையும் மற்றும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோரையும் துரத்திக் கடிப்பதாகப் போக்குவரத்துச் செய்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதியில் செல்வோர் பெரும் சிரமங்க ளையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

நாய்களை வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்க்க நடவடிக்கை எடுக்கவேண் டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-78)




ந.சத்தியபாலனின் நூல் அறிமுக விழா வடமராட்சி, துன்னாலை, அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச கலாசாரப் பேரவை அதிகாரி செல்வி செல்வசுகுணா மங்கள விளக் கேற்றுவதையும், எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் மதிப்பீட்டுரையாற்றுவதையும், ஏற்புரையை கவிதைத் தொகுதி ந.சத்தியபாலன் நிகழ்த்துவதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை நான்காவது படத்தில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

தென்மராட்சி பிரதேச விவசாய மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் இன்றுதிங்கட்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

காலை 9.30 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும் முற்பகல் 11 மணிக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(201-207)

## யாழ்.மாவட்டத்தில் இருந்து ஏ 9 ஊடாக தென்பகுதிக்கு ஒரு லட்சத்து 87 ஆயிரம் பொருள்கள் நேற்று சென்றன

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்.மாவட்டத்தில் இருந்து தென் பகுதிக்கு நேற்றுக் காலை ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 500 கிலோகிராம் பொருள்களுடன் 25 லொறிகள் சென்றுள்ளதாக யாழ்.அரச அதிபர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து தனியாரால் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்ட லொறிகளிலேயே இந்தப் பொருள்கள் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளன.

ஒரு லட்சத்து 60 ஆயிரம் கிலோ வெங்காயம், 3 ஆயிரத்து 500 கிலோ பச்சைமிளகாய், 3 ஆயிரம் கிலோ பீற்றூட், 7 ஆயிரத்து 500 கிலோ நண்டு, இறால், 6 ஆயிரம் கிலோ கருவாடு, 15 ஆயிரம் கிலோ புகையிலை ஆகியன அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்29

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களின் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை ஆகியவற்றிற்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதி புதன்கிழமைகளிலும் சனிக்கிழமைகளிலும் அந்தந்தப் பாடசாலைகளில் யாழ்.வலயப் பாடசாலைகளின் முன்னணி ஆசிரியர்களால் கருத் தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## ஸ்கிறீன் பிறிண்டிங் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வடக்கு மாகாண கைத்தொழில் திணைக் களத்தின் அனுசரணையுடன் கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஊடாக ஸ்கிறீன் பிறிண்டிங் நான்கு மாத பயிற்சி நெறி யூலை மாதம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

சுயதொழில் நோக்கில் அமைந்த இப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற விரும்பு வோர் தமது பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக தத்தமது சுயவிவரத்தினை எதிர் வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர், கரவெட்டி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கரவெட்டி பிரதேச செய லாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (9)

## அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு 10 ★ 06 ★ 1932



இறப்பு 30 ★ 05 ★ 2009

கடந்த 30.05.2009 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம்

### திருமதி தெய்வானை நாகலிங்கம்

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் இன்று (29.06.2009) திங்கட்கிழமை காலை 5 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து ந.ப. நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து, அன்னாரின் ஆத்மசாந்தி பெறப்பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(86627)



இதனால் சகலருக்கும்
அறியத்தருவது என்னவென்றால்
தரத்தில் சிறந்து உற்பத்தியால் உயர்ந்த லக்கிலாண்ட்
பிஸ்கட் வகைகள் தற்போது யாழ்.நகரில் விற்பனையில்
முன்னணி வகிப்பதால் லக்கிலாண்ட் பிஸ்கட் வகைகட்கு
தட்டுப்பாடு வந்து விடுமோ என்ற அச்சம் உங்களுக்கு வேண்டாம்.
உங்கள் பாவனையின் அதிகரிப்பை கருத்தில் கொண்டு விசேடமாக
தருவித்துள்ளார்கள். சிவாநறுமணப் பூங்கா நிறுவனத்தினர்.
விலையில் எவ்வித மாற்றமும் இல்லை. சுவையிலே நிறை மாற்றங்கள் உண்டு.

1. மழலைகள் மனம் மகிழ லக்கிலாண்ட்
2. விருந்தினர் வியப்புற லக்கிலாண்ட்

தவழுகின்ற குழந்தை முதல் தள்ளாடும் தாத்தாவரை தனிரக சுவைக்கு லக்கிலாண்ட்
தேனீர் வேளையிலும் தெவிட்டாத தெள்ளமுதாய் திகழும் லக்கிலாண்ட் உற்பத்திகள்

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகட
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்,நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (Gem) என்னும் பல

*Manufactured By:*

**Luckyland**

*Biscuit Manufactures*

Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : **சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567

இலங்கையில் மிகப்பெரிய இயந்திரத் துறையில் சிறந்த
ஆக்கத்திறனைக் கொண்ட நிறுவனத்தில் இணைந்து கொள்ள...

சிறந்த முறையில் முன்னோக்கிப் பயணிக்கும் குழுவில் சேர்ந்து கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்..

**முகாமைத்துவ பயிற்சியாளர்கள் - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்**

விண்ணப்பிப்பவர்கள் வியாபார நிர்வாகம் / சந்தைப்படுத்தல் / வர்த்தக மற்றும் முகாமைத்துவம் பற்றிய பல்கலைக்கழக சான்றிதல் பெற்றவர்களாகவும் 27 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சிறந்த தொடர்பாடல், திட்டமிடல், ஏற்பாடு செய்தல் பற்றிய திறன், இயந்திரங்கள் செயற்படுத்தல் பற்றிய அறிவுத்திறன், சிறந்த தலைமைத்துவம், உயர்ந்த சந்தைப்படுத்தல் தன்மை மற்றும் சிறந்த முறையில் மேம்படுத்துவதற்காக இத்தொழில் தகைமைகள் பயன்படுத்தல் போன்றவை மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

**விற்பனை முன்னெடுப்புப் பயிற்சியாளர்கள்**

விண்ணப்பிப்பவர்கள் 23 வயதிற்குட்டவர்களாகவும் க.பொ.த(உ.த) இல் 2 சித்திகள் பெற்றிருப்பதுடன் க.பொ.த(ச.த) இல் முதல் தடவையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் 2 சாதாரண சித்திகளும் பெற்றிருக்கவேண்டும்.

தெரிவுசெய்யப்பட்டவர்கள் நாட்டின் எந்தப்பாகத்திலும் குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களில் பணிபுரியக்கூடியவர்களாகவும் தமிழறிவு கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

எழுத்தங்களின் மத்தியில் வேலை புரியக்கூடியவர்களாவும் தனிப்பட்ட முறையில் சிறந்த ஒழுக்கம், நேர்மை மற்றும் திறமையுடையவர்களாகவும் இருத்தல் அவசியமாகும். வேலை நடைமுறையில் தமது நடத்தைகளை சிறப்பாக மேற்கொள்கையில் தமது சுதந்திரத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டும். இதில் இயந்திர தொழிநுட்பம் சம்பந்தமான மேற்கோள்குறிகாட்டிகளையும் பயன்படுத்துவது சிறந்ததாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் உங்களுக்கு உள்ளதாயின் எதிர்கால செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு இக்கடமையை பயன்படுத்துவது உகந்ததாகும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் கொண்டவர்கள் இந்த விளம்பரம் விளம்பரமாகி 7 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். அதில் தம்மை தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தையும் உறவினரல்லாத இருவரினது விலாசத்தையும் குறிப்பிடவும். விண்ணப்பதாரர்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தமது விண்ணப்பத்திற்கான பதவியை குறிப்பிடவும்.

tradlanka

பிரதி முகாமையாளர் - மனித வள
**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடெட்**
திறுவன பதிவு இலக்கம் PB270
த.பெ. 1909, கொழும்பு.

## UNIVERSITY OF JAFFNA TENDER NOTICE

The Chaiman, University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD for the following work.

| Work Details | Refundable deposit (Rs.) | Non refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Civil Works at the Network Operating Centre (NOCs) and direct Electricity supply to Network operating Centre and network Racks at University of Jaffna. | 10,000.00 | 500.00 | M8/C9 |

Tender forms may be obtained from Senior Assistant Registrar/ Capital Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for above tender fee at the Shoff's Counter, University of Jaffna until 13.07.2009

Perfected tender should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna, or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00 p.m on 17.07.2009 and open immediately thereafter.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

P.O Box 57
Thirunelvely,
Jaffna
26.06.2009

(சி/559229)

Registrar
University of Jaffna.

**Contemporary Business Management**

Duration :- 6 Months

முகாமைத்துவத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் பயன்படுத்த தக்க வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவும், வங்கிகள், அரச, தனியார் நிறுவனங்களில் இலகுவாக வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது.

Course Contents

1. Management &Organizational Behaviour
2. Human Resource Management
3. Marketing Management
4. Financial Management
5. Business Communication
6. ICT For Managers

New Batch Starts on 05-07-2009



IIS CITY CAMPUS

#200, Sivan Pannai Road, Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## திட்டமிடப்பட்ட சீர்திருத்தமே அவசியம்

தூரநோக்கற்ற திட்டங்களாலும் செயற்பாடுகளினாலும் நாட்டின் பல்வேறு துறைகளும் சீரழிந்து வருவது வெளிப்படையானது.

இவ்வாறு குழம்பிவரும் துறைகளுள் நாட்டின் கல்வித்துறை பிரதானமானது. காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசுகள் ஒவ்வொன்றும் தத்தமது கொள்கைகள், கோட்பாடுகள், சிந்தனைகள், எண்ணங்கள் என்பனவற்றுக்கு ஏற்ப கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் அவ்வப்போது கொண்டுவந்த ஏற்பாடுகளும், ஒழுங்குகளும், மாற்றங்களும் திருப்திதரத் தக்கனவாக அமையவில்லை என்பதே பொதுவான குற்றச்சாட்டு.

ஓர் அரசு ஆட்சிக்கு வந்ததும் கல்விச் சீர்திருத்தத்துக்கான 'வெள்ளை அறிக்கை' என்று தொடங்கி ஆரம்பிக்கும் ஏற்பாடுகள் அடுத்த அரசு வரும்போது சீந்துவாரின்றி - கேட்பாரின்றி - அலுமாரிகளுக்குள் தூசு படிந்து அடங்கிப் போய் விடுவது வழமை.

பாடத்திட்டங்கள் மாத்திரமின்றி, பரீட்சை முறைகள் மாத்திரமின்றி, அடிப்படைக் கல்வி முறைமைகளிலேயே அவ்வப்போது மாற்றங்கள் வருவதும், பின்னர் சில ஆண்டுகளில் அவை அடிபட்டுப் போவதும்தான் நமது கல்வித்துறையின் பட்டறிவு.

மாறிவரும் நவீன கல்விப் பண்பியல்புகளுக்கு ஏற்ப நாட்டின் கல்வி முறைமையும் மாறவேண்டும் என்பதும், சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியமை இன்றியமையாதது என்பதும் ஏற்புடையவையே. ஆனால் நாளொரு கொள்கை, தவணை ஒரு மாற்றம் என்பது அவசியமற்றது. அதேபோல, கல்விச் சீர்திருத்தங்கள் தீர்க்க தரிசனத்துடன் முன்னெடுக்கப்படுவதும் மிகவும் முக்கியமானதாகும்.

ஆங்கிலத்தில் இருந்த நமது நாட்டின் கல்விமுறை மிகுந்த சர்ச்சைகளின் மத்தியில் - அறுபதுகளின் முற்பகுதியில் - சுயமொழிப் போதனை முறைக்கு மாற்றப்பட்டது. அது சரியா, தவறா என்ற சர்ச்சை இற்றைவரை தொடர்கின்றது. நாட்டில் தேசிய இனப்பிரச்சினை இத்துணை கூர்மையுடன் முரண்பாடடைவதற்கு பொது மொழியான ஆங்கிலத்தில் அமைந்த கல்வி முறைமை நீக்கப்பட்டு, தமிழ், சிங்களத் தேசிய மொழிகளில் இரு சாராரும் பிரிந்து கற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதும் பிரதான காரணம் என்று வாதிடுவோர் உள்ளனர்.'

இப்போதும் கூட இவ்விடயத்தில் தீர்க்க தரிசனமற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

சுயமொழிக் கல்விப்போதனை ஏற்படுத்திய விளைவுகளின் தாக்கத்தை உணர்ந்தோ என்னவோ அரசு திடீரென ஆங்கில மொழிமூலக் கல்வி முறைமையை - பழைய திட்டத்தை - மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நாட்டில் திடீரெனக் கொண்டுவந்தது. - உரிய முன் ஆயத்தங்களைச் செய்யாமல்.

இப்போது இந்தத் திட்டத்தின் கீழ் ஜி.சீ.ஈ. (சாதாரண தரம்) வரை ஆங்கிலத்தில் பயின்று சித்தியடைந்த கணிசமான எண்ணிக்கையான மாணவர்கள் ஜி.சீ.ஈ. (உயர்தரம்) வகுப்புகளை ஆங்கிலத்தில் தொடரக் காத்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு ஆங்கில மொழியில் அந்தப் பாடங்களைப் போதிப்பதற்கு உரிய பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற ஆசிரியர்கள் இல்லை. அதனால் இந்த மாணவர்கள் இன்று 'திரிசங்கு சொர்க்க நிலையில் தவிக்கும் - அந்தரிக்கும் - சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

அரச பாடசாலைகளில் மீண்டும் ஆங்கில மொழிமூலக் கல்வியை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் அறிமுகப்படுத்துவதில் கரிசனை காட்டிய கல்வித்துறை நிர்வாகிகள், அந்த மாணவர்கள் உயர்தர வகுப்புக்குள் நுழையும் போது அவர்களுக்குரிய போதனையை வழங்குவதற்குரிய - தேர்ச்சியும், பயிற்சியும், தகுதியும் பெற்ற - ஆசிரியர்களை ஏற்பாடு செய்யாமல் இந்த விடயத்தில் இறங்கியமை கவலைக்குரியது.

கடந்த தடவை ஆறாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் ஜி.சீ.ஈ. (சாதாரணதரம்) பரீட்சைக்கு ஆங்கில மொழியில் தோற்றியிருந்தனர். அவர்களில் பெரும்பான்மையானோர் உயர்தர வகுப்புக்கான ஆங்கிலமொழிமூல ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாகத் தமது உயர்வகுப்புப் பாடங்களை மீண்டும் சுயமொழியில் - தமிழ் அல்லது சிங்களத்தில் - தொடர வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இப்படி ஜி.சீ.ஈ. (சாதாரண தரம்)வரை ஆங்கில மொழிமூலம் போதனையை நடத்திய மொத்தம் 601 பாடசாலைகளில் ஆக 57 பாடசாலைகளில் மட்டுமே உயர்தரம் ஆங்கில மொழியில் - சில பிரிவுகளுக்கேனும் - போதனை வழங்குவதற்கு ஆசிரியர்கள் உள்ளனர் என்கின்றன புள்ளி விவரங்கள்.

இதன்படி, இந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு பல்வேறு பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற குறைந்த பட்சம் நானூறு ஆங்கில மொழிமூல ஆசிரியர்களாவது அவசரமாகத் தேவை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த ஆசிரிய வள ஆளணியை உடன் தேடிப் பெறுவதற்கான வாய்ப்புகள் மிகமிகக் குறைவு என்றும் கூறப்படுவதால், தமது பிள்ளைகளை ஆங்கில மொழி மூலக் கல்விக்கு மாற்றிய பெற்றோர்கள் அந்த வழியில் அவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான விடயத்தில் அடியோடு நம்பிக்கை இழந்தவர்களாகி வருகின்றனர்.

ஆங்கில மொழிமூல உயர்வகுப்புக் கல்வி வசதி உள்ள பாடசாலைகளைத் தேடி அவர்கள் அலைகின்றனர். அத்தகைய பாடசாலைகளில் தமது பிள்ளை தேர்ச்சிபெற்று கல்வித்துறையில் தொடர்வதற்கு வசதி இல்லாவிட்டால், அங்கு இருக்கும் துறைக்குத் தமது பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி மாற்றும் இக்கட்டும் - அவலமும் - அவர்களுக்கு நேர்ந்திருக்கின்றது. இதனால் விஞ்ஞானத்திலோ, கலைத் துறையிலோ தேர்ச்சிபெற்ற பிள்ளை வர்த்தகத் துறைக்கோ,வர்த்தகத்துறையில் தேர்ச்சிபெற்ற பிள்ளை பிற துறைக்கோ கட்டாயப்படுத்தி மாற்றப்பட்டுக் கல்வியைத் தொடரும் நிலையும் வந்திருக்கின்றது.

''பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலக் கல்வியை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சியை உரியமுறையில் திட்டமிடாமல் கல்வி அமைச்சு முன்னெடுத்ததால் வந்த வினை இது!'' - என்கின்றார் இலங்கை ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஜோஸப் ஸ்டாலின்.

பாவம், இந்தப் பிள்ளைகள்!

# ஓமந்தை பூவரசங்குளம் பகுதிகளில் 800 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்படும்

### வவுனியா அரச அதிபர் சாள்ஸ் தகவல்

கொழும்பு, ஜூன் 29

வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் முதல் தடவையாக சுமார் 800 குடும்பங்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார் என அரச தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை, பூவரசங்குளம் உட்பட 25 கிராமங்களில் முதற்கட்ட மீள்குடியேற்றப் பணிகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் இது தொடர்பான இறுதிக் கட்ட அறிக்கை எதிர்வரும் மூன்றாம் திகதி ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா நலன்புரி முகாம்களிலும், நிவாரணக் கிராமங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 800 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப் படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவர்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள இறுதித் திட்ட அறிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் மீள்குடியேற்றம் ஆரம்பமாகுமென்று வவுனியா அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் மீள் குடியேற்றத் திட்டத்தின் கீழ் அண்மையில் மன்னார் முசலிப் பகுதியில் மக்கள் தமது சொந்த வாழ் விடங்களில் மீள்குடியேற்றப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரபரமாச் சார்ய சுவாமிகளிடம் ஆசி பெற்று அவருடன் கலந்துரையாடினார். அமைச்சருக்கு ஆதீன முதல்வர் பொன்னாடை போர்த்திக் கௌர விப்பதைப் படத்தில் காணலாம்.

# கோப்பாய் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்கு ஐ.டி.டி. வசதியுடன் தொலைபேசி ஏற்பாடு

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கட்டடத்தில் இயங்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கான தற்காலிக நிவாரண நிலையத்தில் தங்கியுள்ள மக்களின் நலன்கருதி வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இணைப்பிற்கான ஏற்பாடுகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மேற்படி நலன்புரி நிலையத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு தங்கியிருக்கும் மக்களின் தேவைகளைத் தனித்தனியாக அம்மக்களிடமே கேட்டு அறிந்து கொண்டதுடன் உடனடியாகத் தீர்க்கக் கூடிய பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார்.

இம்மக்கள் மேற்படி நலன்புரி நிலையத்திற்கு வருகை தந்திருந்த ஆரம்ப காலகட்டத்தில் அங்கு சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இம்மக்களின் உடனடித் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்து கொடுத்துள்ள நிலையிலேயே இம்முறை அங்கு இரண்டாவது தடவையாகவும் விஜயம் செய்திருந்தார்.

இதன்போது, இம்மக்கள் வெளிநாடுகளில் உள்ள தங்களது உறவுகளுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக ஐ.டி.டி. வசதியுடன் கூடிய தொலைபேசி இணைப்பு வசதியைக் கோரியதையடுத்து, உரிய அதிகாரிகளை உடனடியாகத் தொடர்பு கொண்ட அமைச்சர், சனிக்கிழமை முதல் மேற்படி வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதே நேரம் நலன்புரி நிலையத்தினுள் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாதிருந்த நிலையில் அதனையும் வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுத்துள்ள அமைச்சர் அங்குள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 'வன்னி மக்கள் துயர் துடைக்கும் செயற்பாட்டுக் குழு' வினரால் சேகரிக்கப்பட்ட சத்துணவு மற்றும் அத்தியாவசிய ஏனைய பொருள்கள் அடங்கிய பொதிகளை யும் வழங்கினார்.

இம்மக்களின் ஏனைய அனைத்துத் தேவைகளையும் எழுத்து மூலம் தரும்படி கோரியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவர்களது கோரிக்கைகள் யாவும் படிப்படியாக நிறைவேற்றப்படும் எனவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1)

### போக்குவரத்துச்சபைக்கு விண்ணப்பித்தவர்களுடன் அமைச்சர் நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கை போக்குவரத்துச்சபை சார்ந்த பணிகளுக்கு விண்ணப்பித்தவர்களை நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அமைச்சுப் பணிமனையில் விண்ணப்பங்களை சமர்பித்தவர்களை நாளை அமைச்சு அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு அமைச்சின் ஊடக இணைப்புச் செயலாளர் கேட்டுள்ளார். (1)

### நாளை

| | |
|---|---|
| ஆனி 16 | 30.06.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.ப. 10.05 வரை |
| நட்சத்திரம்: | அத்தம் |
| | பி.ப. 03.27 வரை |
| சுபநேரம்: | 10.26 - 11.56 |
| ராகுகாலம்: | 02.56 - 04.26 |

# 40 ஆங்கில ஆசிரியர்களுக்கு இந்தியாவில் உரையாடல் பயிற்சி

### 9 மாகாணங்களிலிருந்தும் பயிற்சியாளர் தெரிவு

கொழும்பு, ஜூன் 29

இலங்கை ஆங்கில ஆசிரியர்கள் 40 பேருக்கு புலமைப்பரிசில் வழங்கி ஆங்கில உரையாடல் தொடர்பான பயிற்சிகளை அளித்து உதவ இந்திய அரசு முன்வந்துள்ளது.

இந்தியாவில் ஹைதராபாத்திலுள்ள ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் தொடர்பான பல்கலைக்கழகத்தில் இந்தப் பியிற்சிகள் அளிக்கப்படும்.

ஜனாதிபதியின் ஆங்கிலக்கல்விக்கான செயல் அணியின் கோரிக்கையின் பேரில் இந்த பயிற்சி அளிக்கப்படவிருக்கின்றது.

பயிற்சியளிக்கப்படவிருக்கும் ஆங்கில ஆசிரியர்கள் 9 மாகணங்களில் இருந்தும் சமாந்தரமுறையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

ஏற்கனவே ஹைதராபாத்திற்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்ட 40 ஆங்கில ஆசிரியர்களைப் போலவே இவர்களும் பயிற்சியை முடித்து திரும்பியதன் பின்னர் சிறப்பு ஆசிரியர் பயிற்சியாளர்களாக நியமனம் பெறுவார்கள். கடந்த ஆண்டு ஹைதராபாத்திற்கு அனுப்பப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு இவ்வாறான ஆசிரிய பயிற்சியாளர்கள் ஏற்கனவே சுமார் 1400 ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கில உரையாடல் தொடர்பான பயிற்சிகளை அளித்திருக்கிறார்கள். அவர்கள் ஆங்கில உரையாடல் தொடர்பான கைநூல் ஒன்றையும் உருவாக்கியிருக்கிறார்கள்.

# மதுரை அருகே தங்கப் புதையல்



மதுரை அருகே தங்கப் புதையலைக் கண்டுபிடித்த சிறுவன் அர்ச்சுனனையும், மண்பானையில் இருந்த ஒரு கிலோ எடையுள்ள தங்கத்திலான உருத்திராட்சங்கள், தங்கக்கட்டிகளைக் காண்க.

சோழவந்தான், ஜூன் 29

மதுரை அருகே புதைந்து கிடந்த மண்கலயத்தில் பழைய தங்க உருத்திராட்ச மணிகள் உள்ளிட்ட ஆபரணங்கள் இருந்தமை நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்டது.

மதுரை மாவட்டம், சமயநல்லூர் அருகே உள்ளது தேனூர். இந்த ஊரில் இருந்து தச்சம்பத்து செல்லும் வழியில் சோணைமுத்துப் பிள்ளை என்பவருக்குச் சொந்தமான இடம் உள்ளது.

இந்த இடத்தில் இருந்த வாவராச்சி மரம் கடந்த 2 மாதங்களுக்கு முன் காற்றில் வேரோடு சாய்ந்தது. சனிக்கிழமை அதே பகுதியைச் சேர்ந்த செல்வம் மனைவி மஞ்சுளா தனது 3 வயது மகன் அர்ச்சுனனுடன் சென்றுள்ளார்.

சிறுவன் மரத்தின் அடியில் விளையாடச் சென்றபோது, சிறு மண்கலயத்தைப் பார்த்து எடுத்தான். அதன் மூடியைத் திறந்தபோது அதிலிருந்து தங்கத்தினாலான உருத்திராட்ச மணி கள் சிதறி விழுந்தன.

இவற்றை அந்தப் பகுதியில் இருந்த சிலர் எடுக்க முயன்றனர். ஆனால் மஞ்சுளா தனது மகன் எடுத்த மண்கலயம் தனக்கே உரியது எனக் கூறினார் எனத் தெரிகிறது.

இதுகுறித்து நிலத்தின் உரிமையாளருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதி கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் புதையல் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து கிராம நிர்வாக அலுவலர், வருவாய் அலுவலர் ஆகியோர் விரைந்து சென்று சிறுவன் கண்டெடுத்த மண்கலயம் மற்றும் அதிலிருந்த தங்கப் பொருள்களை மீட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# நாட்டின் சகல பகுதி மக்களும் இப்போது சம உரிமையுடன் வாழும் உரிமை கிடைத்துள்ளது

## இனி அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 29

அரசியலில் தூர நோக்கில்லாது, நாடு, இனம் என்று சிந்தித்துப் பார்க்காமல் தாய் நாட்டை எழுதிக் கொடுப்பதற்கு சிலர் முயற்சித்தனர். இவை யெல்லாவற்றையும் தோல்வியடைச் செய்துதான் இந்த நாடு ஐக்கியப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் மூலமாக வடக்கு, தெற்கு, கிழக்கு வாழ்கின்ற சகலரும் சமமாக வாழும் உரிமை கிடைத்துள்ளது - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாம் இவ்வளவு நாளும் அரசியல், தேர்தல், விருப்புவாக்குகள் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். ஆனால் இன்று எமது தாய் நாட்டை கட்டியெழுப்புவது தொடர்பிலேயே சிந்திக்கவேண்டியுள்ளது. தேர்தலை முன்னிறுத்தி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் சொன்னார்.

கடந்த 20 வருடங்களாக மூடப்பட்டிருந்த ஹதுகல தேயிலைத் தொழிற்சாலை மஹிந்த சிந்தனையின் கீழ் ஹிருவாய நவோதய வேலைத்திட்டத்தின் மூலமாகத் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் அங்கு நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

தேயிலைத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கிராமத்திற்கு கிராமம் என்ற வேலைத்திட்டத்தின் மூலமாக தெற்கு அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைக்கப்பட்ட ஹதுகல தேயிலை தொழிற்சாலையின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தன்னை மட்டுமே நினைத்து பணி செய்யும் மனிதர்களை விடவும் நாட்டைப் பற்றி சிந்தித்து வேலை செய்யும் மனித சமூகமே இன்று நாட்டிற்குத் தேவையாக வுள்ளது. அபிவிருத்தி தொடர்பில் முழுமையான கவனத்தைச் செலுத்த வேண்டிய காலமிது.

எதிர்கால சந்ததியினருக்காகக் கட்டியெழுப்பப்படுகின்ற இந்நாட்டை பாதாள உலக கோஷ்டியினர், போதைப்பொருள் விற்பனையாளர்கள் இல்லாத நாடாக கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது - என்றார். (அ-சி)

# வடக்கில் தேர்தல் நீதியாக நடந்தால் இரு சபைகளிலும் கூட்டமைப்பு வெல்லும்

## அரியநேத்திரன் எம்.பி. சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 29

வடக்கில், யாழ். மாநகர சபைக்கும், வவுனியா நகர சபைக்கும் சுதந்திரமான முறையில் - நேர்மையாக - தேர்தல் நடத்தப்பட்டால், அந்த இரண்டு சபைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாகக் கைப்பற்றும்.

- இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்கு தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் யாழ். மாநகர சபைக்கும் வவுனியா நகர சபைக்கும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு அங்கு தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜா தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட பல முக்கியஸ்தர்கள் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அதேபோல வவுனியாவில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தலைமையில் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் எப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். இதுவரை எமது கட்சிக்கு எதிராக வன்முறைகள் எவையும் இடம்பெற்றதாக தகவல் இல்லை. ஆனால், இனிமேலும் எமது வேட்பாளர்கள், வாக்காளர்களை - கட்சி ஆதரவாளர்களை அச்சுறுத்தாமல், அவர்கள் மீது வன்முறைகள் ஏவிவிட முயற்சிக்காமல் சுதந்திரமாக தேர்தல் நடத்தப்படவேண்டும்.

அவ்வாறு சுதந்திரமாக - நீதியான தேர்தல் நடத்தப்பட்டால், யாழ். மாநகர சபையையும் வவுனியா நகர சபையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாகக் கைப்பற்றும் - என்றார். (சி)

# ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்க அரசு திட்டமாம்

## ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு, ஜூன் 29

தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுள்ளமையால் தொழில்வாய்ப்பை இழந்துள்ள சுமார் 80 ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியில் இருந்து கொடுப்பனவுகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்காக யாருடைய சேமலாப நிதியில் கைவைக்கப்படப் போகின்றது என்று தமக்குத் தெரியவில்லை என்றும் அக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பியான லக்ஷ்மன் கிரியெல்லவே இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன என்றும் தொழிலாளர்கள் தொழில்வாய்ப்பை இழந்து வருகின்றனர் என்றும் ஒன்றரை வருடங்களுக்கு முன்பே நாம் கூறினோம். அவர் அதை அப்போது ஏற்றுக்கொள்ளவில்லை என்றார்.

### வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் அதிக அளவிலான நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் சிக்கிக் கொள்ளும் சாத்தியமும் இருப்பதாக இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் பிரஜைகளுக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயுதக்குழுக்களினால் ஆபத்து ஏற்படலாம் எனவும், எனவே கிழக்கு மாகாணத்திற்குப் பயணிப்பதைத் தவிர்க்கும் படியும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் குறிப்பாக அநுராதபுரம், மதவாச்சி ஏ- 14 வீதி, திருகோணமலை நகரப்பகுதி மற்றும் திருகோணமலை, அம்பாறை, அநுராதபுரத்தில் உள்ள ஏ- 4 வீதி, மஹாஓயா போன்ற பகுதிகளுக்குப் பயணிப்பதைத் தவிர்க்குமாறும் அமெரிக்கா தனது பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (அ-சி)

### பஸ் தடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை மஹியங்கனையிலிருந்து வந்த இந்த பஸ் கண்டி மெதநுவரவில் உள்ள உடதலவின்ன என்னும் இடத்தில் தடம் புரண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை தினமான நேற்று மகியங்கனையில் உள்ள முன்பள்ளிப் பாடசாலை ஒன்றின் மாணவர்கள் சிலர் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை நோக்கி வந்து கொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

### 'சிரச' வின்..,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்விலேயே இச்சம்பம் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்ற முற்பட்ட அமைச்சர் மேர்வின் சில்வா - நாட்டை நேசிக்கும் ஒழுக்கமான ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் கௌரவிக்கும் இச்சந்தர்ப்பத்தில், உள்நாட்டில் இருந்துகொண்டு சர்வதேசத்துடன் இணைந்து வடக்கின் இராணுவ நடவடிக்கைகளை இழிவுபடுத்தி நாட்டுக்குத் துரோகம் செய்த 'சிரச' ஊடகத்தை அனுமதிக்கக் கூடாது எனக் கூறினார். அத்தோடு அந்நிறுவனத்தின் ஒலிவாங்கியை வீசி எறிந்தார்.

அதன் பின்னர் அங்கு உரையாற்றிய அமைச்சர், நாட்டை பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவித்த எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மன்னர் என்றே அழைக்க வேண்டும். அதுவே நாம் அவருக்கு கொடுக்கும் கௌரவமாகும் - என்று கூறினார். (அ-சி)

### சட்டக்கல்விக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டக்கல்வியிலும் கைவைத்துள்ளது. சட்டக்கல்வியைப் பயில சட்டக்கல்லூரிக்குள் நுழையும் மாணவர்களின் வயதெல்லையை 30 ஆக மாற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

சட்டக்கல்வியைத் தொடர்வதற்கு இந்த நாட்டில் மாத்திரமின்றி உலகில் எந்த நாட்டிலுமே வயதெல்லை கிடையாது. இலங்கையில் மாத்திரம் இதில் மாற்றத்தைக் கொண்டுவர இந்த அரசு முற்படுகிறது.

இந்த அரசில் உள்ள எத்தனையோ பேர் 30 வயதைக் கடந்த பின்புதான் சட்டக்கல்வியைத் தொடர்ந்தனர். இப்போது வயதெல்லையை நிர்ணயிக்க அரசு தீர்மானித்திருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த விடயத்தை அரசு உடன் ஆராய்ந்து பார்த்து சட்டக்கல்வியையும் மாணவர்களின் உரிமையையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

### விடுதலைப்புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தை அனுபவிக்கும் நோக்கில் சில நபர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்களைப் போன்று தோன்ற எத்தனிக்கிறார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மே மாதம் 19ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இயக்கத்தின் சகல செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன - என்றார். (அ-சி)

### உதயனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டறிந்து விசாரித்து வருகின்றன.

உதயனை முடக்குவதற்கு சில சக்திகள் எடுக்கும் இந்த முயற்சியும் அது தொடர்பான நடவடிக்கைகளும் தமிழர் தாயக பிரதேசங்களை முற்றாக தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து, அங்கு சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்தியுள்ளதாக அரசு விடுத்த அறிக்கையை கேள்விக்குள்ளாக்கி யுள்ளதாக தமிழ் அரசியல் கட்சிகள் விசனம் தெரிவித்திருக்கின்றன.

இந்த அச்சுறுத்தல், பற்றிய தகவல் கிடைத்ததும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் நேற்று 'உதயன்' அலுவலகத்துக்கு நேரில் விஜயம் செய்தனர். எந்த அசம்பாவிதங்களுக்குத் தாம் இடமளிக்க மாட்டோம் என 'உதயன்' நிர்வாகத்திடம் உறுதி தெரிவித்த அவர்கள், இவ்விடயத்தை ஒட்டி அரச உயர் மட்டத்தில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரியப்படுத்தினர்.

### செட்டிக் குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார். (அ-சி)

### இராணுவத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த ஒருசிலரே அரச படையுடன் இணைய விரும்பினர் என அக்கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் கூறுகின்றார். (அ-சி)

### வவுனியா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளவை வருமாறு:-

வவுனியாவில் மனிதாபிமான அமைப்புகளுக்கான அனுமதி வழங்கப்படுவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் முகாம்களுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுவதும் தாமதம் செய்யப்படுவதும் தொடர்வதாக மனிதாபிமான அமைப்புகள் தெரிவிக்கின்றன.

ஓமந்தைக்கு அப்பால் செல்வதற்கு தொடர்ந்தும் மனிதாபிமான அமைப்புகள் அனுமதி கோரி வருகின்றன. அடுத்த மாதம் இப்பகுதியில் மீள் குடியேற்றம் இடம்பெறவுள்ளது.

மக்கள் ஒரே இடத்தில் பெருமளவில் தங்கவைக்கப்பட்டுள்ள நிலையை மாற்ற முயற்சிகள் இடம்பெறுகின்றன.

தகுதிவாய்ந்த அதிகாரிகளுடனான ஆலோசனையின் பின்னர், 80 ஏக்கரில் ஆயிரத்து 200 கூடாரங்களைக் கொண்டதாக முகாம் அமையவேண்டும் என இணக்கம் காணப்பட்டுள்ளது.

#### முகாம்களில் தீ அபாயம் குறித்து எச்சரிக்கை

வீரபுரம் மற்றும் சுமதிபுரம் முகாம்களில் தீ அபாயம் குறித்து அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் மருத்துவ வசதிகள் போதியளவு இல்லை. அவசர நோயாளர்களைக் கொண்டுசெல்ல வாகனங்கள் இல்லை.

இடம்பெயர்ந்தவர்கள் மத்தியிலான முக்கிய தொற்றுநோயாக சின்னமுத்து மற்றும் வாந்திபேதி காணப்படுகிறது -

இது தவிர சுவாசப்பிரச்சினைகள், தோல் வியாதி மற்றும் தொற்றுக்காய்ச்சல் என்பன காணப்படுகின்றன.

போதியளவு வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ள போதிலும் வைத்திய நிபுணர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் அதிகரிப்பதால் மேலதிக பணியாளர்கள் தேவை.

போதியளவு குடிதண்ணீர் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக் குறித்து ஆராயப்படுகின்றது.

ஜூலை மாதத்துக்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவு வழங்குவதற்குத் தேவையான நிதி வசதியின்மை குறித்து உணவு விநியோகத்துடன் தொடர்புபட்டவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களுக்கென பத்து இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எனினும், அங்கு செல்வதற்கு மனிதாபிமான அமைப்புகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது - என்று கூறப்பட்டுள்ளது. (அ-சி)

**11 ஆவது ஆண்டு நினைவஞ்சலி**

**திருமதி புனிதவதி நல்லதம்பி**

மலர்வு 1925.03.12 உதிர்வு 1998.07.01

எங்களுக்கு நல்வழி காட்டிய அம்மாவே! எமக்கு இனிய வாழ்வளித்த தெய்வமே எங்கள் உயிர் உள்ளவரை இந்த மண்ணில் உங்களோடு வாழ்ந்த நினைவுகள் எம்மனதை விட்டு அகலாது

தகவல்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்

*மானிப்பாய் வீதி, உரும்பிராய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.